# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 13 வியாழக்கிழமை 28.11.2024 கதிர் 66





## வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள

# சட்டவிரோத கட்டடங்களை இடித்து அகற்றப் பணிப்பு!

## - அதிகாரிகள் கூட்டத்தில் ஆளுநர் அதிரடி -

யாழ்ப்பாணம், நவ. 28

வடக்கு மாகாணத்தில் வெள்ளம் வழிந்தோடுவதற்குத் தடையாக - வெள்ள வாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை இடித்து அகற்றுமாறு வடக்குமாகாணஆளுநர்நா.வேதநாயகன் அதிகாரிகளைப் பணித்துள்ளார். இது தொடர்பில் மீண்டும் மீண்டும் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்தநிலைமை தொடர்பில் ஆராயும், நேரலைவழிக் கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது. இதன் போதே ஆளுநர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள அனர்த்தப் பாதிப்புக்கள் தொடர்பில் அந்தந்த மாவட்டச் செயலர்கள் மற்றும் மேலதிக மாவட்டச் செயலர்களால் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான 2 ➤

## இடைத்தங்கல் முகாம்களில் உள்ளோருக்கு நடமாடும் மருத்துவ சேவைகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 28



யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாகப் பாதிப்படைந்து தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள 68 இடத்தங்கல் முகாம்களிலும் இடைத்தங்கல் முகாங்களை அகற்றும் வரை வைத்திய சேவைகள் யாழ் போதனா வைத்தியசாலையால் மேற்கொள்ளப்பட உள்ளன.

அதன் முதற்கட்டமாக, வெள்ள அனர்த்த நிலைமை காரணமாகத் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை இடைத்தங்கள் முகாமில் தங்கி உள்ள மக்களுக்கு இன்று நடமாடும் 2 ➤

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணத்துக்கு நேரில் விஜயம்!

### -அனர்த்த நிலைமைகளை கேட்டறிந்தார்-





யாழ்ப்பாணம், நவ 28

யாழ்ப்பாண மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்தம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயாகொந்த நேரடியாக விஜயமொன்றை மேற்கொண்டு அதிகாரிகளிடம் நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து 2 ➤

## அனர்த்தநிலை தொடர்வதன் காரணமாக உயர்தரப் பரீட்சை 3 நாள்கள் ஒத்திவைப்பு!

கொழும்பு, நவ. 28

சீரற்ற காலநிலை காரணமாக கடந்த 27 ஆம் திகதி முதல் நாளை 29 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டிருந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை அடுத்த வாரம் - டிசெம்பர் 04 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட பரீட்சைகளை எதிர்வரும் 30 ஆம் திகதி மீள ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நிச்சயமற்ற காலநிலை நிலவுவதனால் எதிர்வரும் 03 ஆம் திகதி வரை பரீட்சைகளை இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், டிசெம்பர் 04 ஆம் திகதி முதல் அன்றைய நேர அட்டவணைப்படி பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் அமித் ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, டிசம்பர் 04ஆம் திகதி முதல் பரீட்சைகள் மீள ஆரம்பிக்கப்படும். நவம்பர் 27ஆம் திகதிக்குரிய பரீட்சை டிசம்பர் 21ஆம் திகதியும், நவம்பர் 28ஆம் திகதிக்குரிய பரீட்சை டிசம்பர் 23ஆம் திகதியும், நவம்பர் 29 இற்குரிய பரீட்சை டிசம்பர் மாதம் 27ஆம் திகதியும், நவம்பர் 30ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை டிசம்பர் 28ஆம் திகதியும், டிசம்பர் 2ஆம், டிசம்பர் 3ஆம் திகதிகளுக்குரிய பரீட்சைகள் முறையே டிசம்பர் 30, டிசம்பர் 31 ஆம் திகதிகளிலும் நடைபெறும் என பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாற்றப்பட்ட திகதிகளுக்குரிய 2 ➤

## சீரற்ற காலநிலையால் உயிரழந்தோர் தொகை 12 02 பேரைக் காணவில்லை : 17 பேருக்குக் காயம்!

### – அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிக்கை –

கொழும்பு, நவ. 28

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்கு அனர்த்தம் காரணமாக 12 பேர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இன்றுகாலை10.00மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள நிலவர அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக அம்பாறையில் 8 இறப்புக்களும், பதுளை, புத்தளம், திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா ஒவ்வொரு இறப்பும் பதிவாகியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பல்வேறு அனர்த்த சம்பவங்களினால் இரண்டு பேர் காணாமல் போயுள்ளதாகவும், 17 பேர் காயமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 23 மாவட்டங்களில் 99 ஆயிரத்து 876 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 35 ஆயிரத்து 155 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளப்பெருக்கு மற்றும் அனர்த்தத்தின் 2 ➤

## சீரற்ற காலநிலை காரணமாக மேலும் இரண்டு பரீட்சைகள் பிற்போடப்பட்டன!

### -பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு-

எதிர்வரும் டிசெம்பர் முதலாம், இரண்டாம் திகதிகள் கொழும்பில் நடைபெறவிருந்த அரசாங்க - பொதுப் பரீட்சைகள் இரண்டு மறு தேதியிடப்படாமல் பிற்போடப்பட்டுள்ளதாகவும், புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளித்த பரீட்சைகள் ஆணையாளர், எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகள் கொழும்பில் நடைபெறவிருந்த சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சையும், கணக்காய்வு மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளி விபரவியலாளர்கள் மற்றும் புள்ளி விபரவியலாளர்களுக்கான முதலாவது தடைதாண்டல் பரீட்சையுமே மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பல 2 ➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## சட்டவிரோத கட்டடங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகள் வழங்கப்பட்டு வருவது தொடர்பிலும் ஆளுநரின் கவனத்துக்கு அவர்கள் கொண்டுவந்தனர்.

அனலைதீவு, எழுவைதீவு போன்ற பிரதேசங்களுக்கு மின்சாரம் பகலில் துண்டிக்கப்பட்டு இரவில் மாத்திரம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. மின்சார விநியோகத்துக்கு தேவையான எரிபொருள் குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருப்பதாகவும், கடல் பயணத்துக்கு ஏதுவான நிலைமை ஏற்பட்டதும் அவற்றை உடனடியாக கடற்படையினரின் உதவியுடன் கொண்டு செல்வதற்கு தயாராக இருப்பதாகவும் இலங்கை மின்சார சபையின் வடக்குப் பிராந்திய முகாமையாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, அந்தப் பிரதேசங்களிலுள்ள மருத்துவமனைகள் மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரத்தை பெற்று இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பல வெள்ள வாய்க்கால்களில் வெள்ளம் நிரம்பிய நிலையில் இருப்பதால் அதனுள் குப்பைகளைக் கொட்டுவதற்கு முயற்சிக்கக் கூடும் எனவும் அது தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வெள்ளம் வடிந்தோடாமல் இருப்பதற்கு வெள்ள வாய்க்கால்களை ஆக்கிரமித்து சட்டவிரோத கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் காரணம் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், அவற்றை அகற்ற துரித நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

அதேபோன்று சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள ஏனைய கட்டடங்களையும் அகற்றுமாறும் ஆளுநர் பணித்ததுடன், திரும்பத் திரும்ப இந்த விடயங்கள் தொடர்பில் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்றும் குறிப்பிட்டார். அடுத்த ஆண்டு இந்த விடயங்கள் அனைத்தும் சீராக்கப்பட்டிருப்பதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளம் வடிந்தோடிய பின்னர் கிணறுகளுக்கு குளோரின் இடுவதற்குரிய ஆயத்தங்களைச் சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும், நோய் நிலைமைகள் தொடர்பில் கண்காணிப்பதற்குரிய சகல ஏற்பாடுகளும் முழுமைப்படுத்தப் பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரியப்படுத்தினார்.

தொடர் மழை காரணமாக பெருமளவு பயிர்கள் அழிவடைந்து போயுள்ளதாகவும், வெள்ளம் இன்னமும் வழிந்தோடாமல் இருப்பதால் பயிர் அழிவு தொடர்பில் சரியான மதிப்பீட்டை தற்போது முன்னெடுக்க முடியாது இருப்பதாகவும் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ஐ)

## இடைத்தங்கல் முகாம்களில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவமுகாம் மூலம் சேவை வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் முன்னாள் பிரதிப் பணிப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மருத்துவர் எஸ். ஸ்ரீ பவானந்தராஜா இன்று யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை இடைத்தங்கள் முகாமுக்கு விஜயம் செய்து நடமாடும் மருத்துவ முகாமை ஆரம்பித்து வைத்தார்

இதன்போது, யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கந்தர்மடம் வட கிழக்கு கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த 53 குடும்பங்களைச் சேர்ந்த 141 பேர் யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை இடைத்தங்கள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## பாதுகாப்பு அமைச்சின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)





இந்தச் சந்திப்பின் போது, ஏற்பட்டுள்ள அனர்த்தங்களின் நிலைமை தொடர்பில் ஆராயப்பட்டதுடன், அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது பொதுமக்களை எவ்வாறு பாதுகாப்பது, என்னென்ன முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ஐ-77)

கொண்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் கடற்றொழில், நீரியல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, முப்படைகளின் பிரதிநிதிகள், மாவட்டம் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவத்தில் பணியாற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## அனர்த்தநிலை தொடர்வதன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தப்பட்ட நேர அட்டவணை அடுத்த வாரமளவில் அனுப்பிவைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-03)

## சீரற்ற காலநிலை காரணமாக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகங்களிலும் ஏற்பட்டுள்ள வெள்ள மற்றும் அனர்த்த நிலைமைகளினால் பரீட்சார்த்திகள் கொழும்புக்கு வருவதற்றுப் பல இடைஞ்சல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே இந்த இரு பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன என்றும், புதிய திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சீரற்ற காலநிலையால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக வாழ்விடங்களை விட்டு வெளியேறியுள்ள 8 ஆயிரத்து 678 குடும்பங்களைச் சேர்ந்த 27 ஆயிரத்து 717 பேர் 279 பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும், 18 ஆயிரத்து 025 குடும்பங்களைச் சேர்ந்த 61 ஆயிரத்து 290 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக ஆயிரத்து 708 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் 95 வீடுகள் அழிந்துள்ளன.

பதுளை, கொழும்பு, கம்பஹா, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் சில பகுதிகளுக்கு மஞ்சள், அம்பர் மற்றும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், அதிக ஆபத்துள்ள பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், அனுராதபுரம், புத்தளம், குருநாகல், வவுனியா, கண்டி, பதுளை, பொலன்னறுவை மற்றும் நுவரெலியா ஆகிய பகுதிகளில் உள்ள பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் இன்று காலை 06.00 மணிக்கு திறக்கப்பட்டன. இதன் காரணமாக மகாவலி ஆறு, ஹெட ஓயா, தெதுரு ஓயா, முந்தேனி ஆறு, மல்வத்து ஓயா, கலா ஓயா மற்றும் களனி ஆறு ஆகியவற்றின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதால் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாத்தறை, பதுளை, பொலன்னறுவை, குருநாகல், அனுராதபுரம், நுவரெலியா, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் இன்று காலை வரை வீதித் தடைகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேரிடர் பாதித்த பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்காக முப்படையைச் சேர்ந்த 2 ஆயிரத்து 723 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (இ)

மாலைக்கதிர் Maalaikkathir

ஆசிரியர் பீடப் பணியாளர் தேவை

மாலைக்கதிர் நாளிதழில் ஆசிரியர் பீடத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

- உதவி ஆசிரியர் / பயிலுநர்கள்
- ஒப்பு நோக்குனர்

தகுதி, திறமையின் அடிப்படையில் கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் ஆர்வமுடையவர்கள் தமது சுயவிவரக்கோவையினை 077 307 78799 என்ற whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நெடுந்தீவிலிருந்து ஹெலி மூலம் மூன்று பேர் யாழ்ப்பாணத்துக்கு!



நெடுந்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 03 நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக இலங்கை விமானப்படையின் உலங்கு வானூர்திமூலம்யாழ்போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு வைத்தியசாலையின் ஏற்பாட்டில் நெடுந்தீவில் இருந்து மூன்று நோயாளர்களும், அவர்களது உதவியாளர்களும் உலங்கு வானூர்தி மூலம் பலாலி விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கிருந்து தரை வழியாக அம்புலன்ஸ் மூலம் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ - 77)


# தாழமுக்கத்தின் வீரியம் நாளை முதல் குறையும்!

கொழும்பு, நவ. 28

தென்கிழக்கு வங்காள விரிகுடா பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக, நிலவும் சீரற்ற காலநிலை நாளை முதல் படிப்படியாகக் சீராகும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

திருகோணமலைக்கு வடகிழக்கே சுமார் 110 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்ததாழமுக்கம்நாட்டின்கிழக்குகடற்கரையை அண்மித்து வடமேற்கு நோக்கி நகர்ந்து செல்வதாக அந்த திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

அதன்படி, மறு அறிவித்தல் வரை நாட்டைச் சூழவுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என வளிமண்டலவியல்திணைக்களம்கடல்சார்மற்றும் மீனவசமூகத்தைஅறிவுறுத்தியுள்ளது.இதேவேளை, வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவிலான பலத்த மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



அந்த திணைக்களம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிவித்தலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. வடமத்திய, மேல், சப்ரகமுவ, வட மேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக் கூடும். வடக்கு, கிழக்கு, மத்திய, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் மணித்தியாலத்துக்கு 60 கிலோமீற்றர் வரையில் காற்று வீசக் கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)






சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் மற்றும் பாதிப்புக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் விசேட கூட்டம் இன்று காலை வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்ஹ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ.சரத்சந்திர , வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அதிகாரிகள், மற்றும் பாதுகாப்புப் துறை அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (இ)



# நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் கீழ் முதலாவது தீர்ப்பு: பொய்த் தகவல் பரப்பியவருக்கு 06 மாத கடூழியச் சிறை!


கொழும்பு, நவ.28

முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் தகவல் பரப்பிய வர்த்தகர் ஒருவருக்கு எதிராக கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதகால கடூழியச் சிறைத் தண்டணை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானுக்கு எதிராக அவதூறான வகையில் பேஸ்புக் மற்றும் வட்ஸ்அப் சமூகவலைத் தளங்களில் சோடிக்கப்பட்ட ஒலிப் பதிவு ஒன்றை அனுப்பினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் மன்னாரைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு எதிராக முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுத்திருந்தார்.

அதனடிப்படையில், முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.யூ.எம். அலிசப்ரி முறைப்பாட்டாளர் சார்பில் முன்னிலையாகி வாதாடினார். சமர்ப்பணங்களின் முடிவில் சந்தேகநபருக்கு ரூபா 5,000.00 தண்டப்பணமும், ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறைத்தண்டணையும் விதித்துத் தீர்ப்பளித்த நீதவான், குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது சமூக வலைத்தளப் பதிவுகளில் இருந்து சர்ச்சைக்குரிய ஒலிப்பதிவை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# முன்னாள் பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன் மறைவு



(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர்களில் ஒருவரும் அக்கட்சியின் முதலாவது தவிசாளரும், முன்னாள் ஊடகத்துறை பிரதியமைச்சருமான சட்டத்தரணி எம்.எச். சேகு இஸ்ஸதீன் இன்று வியாழக்கிழமை காலமானார்.

1944 ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது 80வது வயதில் சொந்த ஊரான அக்கரைப்பற்றில் காலமானார். தீவிர சமூக அரசியலில் ஈடுபட்ட அவர், முஸ்லிம் உரிமைகளுக்காக அதிகம் குரல் கொடுத்தார். இலக்கியத் துறையில் அதீத நாட்டம் காட்டிய அவர். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபுடன் இணைந்து, முஸ்லிம் காங்கிரஸை ஸ்தாபித்து வளர்த்தெடுத்ததில் பிரதான பங்களித்தவர். 1982ஆம் ஆண்டு, சட்டக் கல்லூரியில் சட்டக் கல்வியை நிறைவு செய்து பின்னர் அரசியலில் ஈடுபட்டார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர், ஊடகப் பிரதி அமைச்சர், ஏற்றுமதி அபிவிருத்தி பிரதியமைச்சர் மற்றும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் போன்ற பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

கவிதை எழுதுவதில் ஆர்வம் கொண்ட அவர், பல்வேறு நூல்களை எழுதியுள்ளதோடு, அரசியலையும் கவிதை நயத்துடன் மக்கள் முன் கொண்டு சேர்ப்பதில் வித்தகராக விளங்கிய அவர், வேதாந்தி எனும் புனைப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்.

இலங்கை அரசியலில் பேச்சாற்றல் மிக்க தலைவராக இருந்த எம்.எச். சேகு இஸ்ஸதீன் அவர்களின் இழப்புக்கு அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள் பலரும் இரங்கல் வெளியிட்டு வருவதுடன் அன்னாரது ஜனாஸா நல்லடக்கம் இன்று மாலை மஹ்ரிப் தொழுகையை தொடர்ந்து அக்கரைப்பற்றில் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-78)

# காரைதீவில் காணாமல் போன அறுவரின் சடலங்களும் மீட்பு!



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதான வீதியில் நேற்று ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் அள்ளுண்டு மாயமான அறுவரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

நிந்தவூர் மதரஸா ஒன்றிலிருந்து சம்மாந்துறைக்கு விடுமுறையில் சென்ற மாணவர்களில் 06 பேர் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த சம்பவம் முழு தேசத்தையும் உலுக்கியிருந்தது.

இவர்கள் அனைவரும் சம்மாந்துறையை வசிப்பிடமாகக் கொண்ட 12 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் ஆவர்.

காணாமல்போனவர்களில் நான்கு பேரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டிருந்த நிலையில் மீதி இருவரதும் சடலங்கள் இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைதீவு பிரதான வீதியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் 11 பேர் பயணம் செய்த உழவு இயந்திரம் வெள்ள நீரில் தடம்புரண்ட நிலையில் அதில் பயணம் செய்தவர்கள் வெள்ள நீரில் அள்ளுண்டு காணாமல் போயிருந்தமையும், ஐந்து பேர் மீட்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-115)




# அர்ச்சுனா எம்.பி யின் பிடியாணை இரத்து!

கொழும்பு, நவ.28

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணையை மீளப்பெறுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சனா, தனது சட்டத்தரணி ஊடாக இன்று வியாழக்கிழமை நீதிமன்றில் முன்னிலையானதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி கொழும்பு - பேஸ்லைன் வீதியில் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, இன்னுமொரு காருடன் மோதி விபத்தை ஏற்படுத்தியதுடன், வாகனச் சாரதியைத் தாக்கிக் கடுமையாகக் காயப்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா வழக்கு விசாரணைகளில் முன்னிலையாகாமல் தொடர்ந்தும் விசாரணைகளைத் தவிர்த்து வந்ததனால் அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், இன்று இராமநாதன் அர்ச்சுனா நீதிமன்றில் முன்னிலையானதைத் தொடர்ந்து அவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை மீளப்பெறுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# யாழ்.போதனாவின் செயற்பாடுகள் வழமைக்கு பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தகவல்!

யாழ்ப்பாணம், நவ.28

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனைத்து சேவைகளும் வழமை போல நடைபெறுவதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ''வெள்ளப் பெருக்கு காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சில விடுதி பகுதிகளில் நீர் புகுந்துள்ளது. மேலும், பலஊழியர்களின்வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், அவர்கள் வேலைக்கு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தமது வீட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் பொருட்படுத்தாமல் பலஊழியர்கள் சேவையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

தொடர்ந்து மழை பெய்து கொண்டிருப்பதால், சாதாரண வைத்திய சேவைகளை வழங்குவதில் சிக்கல்கள் இருக்கக்கூடும் என அறிவித்திருந்தோம். இருப்பினும் பெரும்பாலான ஊழியர்கள் மக்களுக்கான சேவைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் கடமைக்கு வந்துள்ளார்கள். ஆகையால் அனைத்து சேவைகளும் வழமை போல நடைபெறுகின்றன.

அனர்த்தம் காரணமாக விபத்துக்களால் பாதிக்கப்பட்ட அல்லது தொற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இனிமேல்தான் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்கு வருகைதருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் எதிர்காலத்தில் டெங்கு தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களும் வைத்தியசாலைக்கு வருகை தரக்கூடும் என எதிர்பார்க்கின்றோம்.

ஆகையால் அவர்களுக்கு தேவையான சிகிச்சைகளை வழங்குவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.'' என்று குறிப்பிட்டார். (ஐ)

# உலக வங்கித் தலைவருடன் அநுர நிகழ்நிலைச் சந்திப்பு!



கொழும்பு, நவ. 28

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும், உலக வங்கியின் தலைவர் அஜே பங்காவுக்கும் இடையில் இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி குறித்த கலந்துரையாடலொன்று நேற்று புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நிகழ்நிலைத் தொடர்பாடல் முறையூடாக இடம்பெற்றது.

இதன்போது, புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கம் மற்றும் எதிர்கால அபிவிருத்தி சவால்களை வெற்றி கொள்ள இலங்கைக்கு வழங்க வேண்டிய ஒத்துழைப்புக்கள் குறித்து அஜே பங்கா கருத்துத் தெரிவித்ததோடு, சுகாதாரம், சமூக பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட துறைகளில் புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்த நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

பொருளாதாரக் கொள்கைகள், நிதி, போட்டித்தன்மை, முதலீடு, நிறுவன மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட விடயங்களில் தற்போதும் உலக வங்கி இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருகின்ற நிலையில், எதிர்காலத்தில் விவசாய அபிவிருத்து, நீர் முகாமைத்துவம், பாதுகாப்பு, சுற்றாடல் நிலைத்தன்மை, சமூக மேம்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு மற்றும் டிஜிட்டல் பரிமாற்றம் ஆகியவற்றுக்கும் ஒத்துழைப்பு வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, கிராமிய பகுதிகளில் வறுமையை ஒழிப்பதற்கு அரசாங்கம் காட்டும் அக்கறை குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க,

வலுசக்தி துறையின் முதலீடுகளை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தியிருப்பதாகவும், சுற்றுலாத் துறை, கடற்சார் தொழில்துறை, அரச நிறுவனங்கள் மற்றும் வலுசக்தி துறைகளை பலப்படுத்தி அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பொருளாதார முன்னேற்றத்தை உறுதிப்படுத்தல், குறிப்பாக கல்வி, சுகாதாரம், மனிதவள அபிவிருத்தி தொடர்பில் விளக்கமளித்த ஜனாதிபதி, இந்த பகுதிகளில் காணப்படும் தொழிற்படையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கல்வி மற்றும் தொழில் கல்வித் துறைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

2025 ஜூலை 25 ஆம் திகதி திறக்கப்படவிருக்கும் 20 தெற்காசிய கூட்டு அலுவலகங்களின் அனுசரணை நாடாக இலங்கையும் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக கூறிய உலக வங்கியின் தலைவர் உலக வங்கிக் குழுமத்தின் கீழ் காணப்படும் மீள் கட்டியெழுப்பல் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி, சர்வதேச அபிவிருத்தி வங்கி, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் பலதரப்பு முதலீட்டு பிணைகளுக்கான முகவர் நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மேற்படி அலுவலகத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோரும் இந்த நிகழ்நிலைச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ஐ)






# அம்பாறை உழவு இயந்திர விபத்து தொடர்பில் பாடசாலையின் அதிபர் உட்பட 4 பேர் கைது!



அம்பாறை, நவ. 28

அம்பாறை-காரைத்தீவுமாவடிப்பள்ளிபாலத்துக்கு அருகில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் சிக்கிய சம்பவம்தொடர்பில்மத்ரசாபாடசாலையின்அதிபர், ஆசிரியர் மற்றும் உழவு இயந்திர உதவியாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 26ஆம் திகதி மத்ரசா பாடசாலை முடிந்து சம்பந்தப்பட்ட மாணவர்கள் வீடுகளுக்குச் செல்ல பஸ் இல்லாததால், தலைமையாசிரியர் குறித்த உழவு இயந்திரத்தில் செல்லுமாறு அறிவுறுத்தியதோடு அதற்காகப் பணமும் வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

வெள்ளம் காரணமாக குறித்த வீதியில் பஸ் சேவைகள் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறானதொரு பின்னணியில் பணத்துக்காகப் பயணிகளை ஏற்றிச் செல்லும் உழவு இயந்திரத்தில் பிள்ளைகளை அவர்களது வீடுகளுக்கு அழைத்துச் செல்லுமாறு அதிபர் பணிப்புரை வழங்கியதாகப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

11 மாணவர்களுடன் சென்ற உழவு இயந்திரம் வெள்ளத்தில் சிக்கி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மாணவர்கள் அனைவரும் காணாமல் போயிருந்தனர்.

அவர்களில் 5 பேர் மீட்கப்பட்டிருந்தனர். 6 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இவர்களின் சடலங்கள் அனைத்தும் மீட்கப்பட்டுள்ளன. (இ)

## செயலாளர்கள் நியமனம்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் இரு அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. சுற்றாடல் அமைச்சின் செயலாளராக கே.ஆர்.உடுவாவல நியமிக்கப்பட்டுள்ளதுடன், விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக வை.எல்.மொஹமட் நவாவி நியமிக்கப்பட்டுள்ளார். (இ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.11.2024 இல் வெளியிடப்பெற்றது.